விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 05 புதன்கிழமை (20.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 01

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# “தேசத்தின் குரல்” பாலசிங்கத்தின் இறுதி நிகழ்வுகள் இன்று லண்டனில்

## நோர்வேக் குழுவினரும் பங்கேற்பர்?



(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் இறுதிக்கிரியைகள் இன்று லண்டனில் நடைபெறவுள்ளது.

பிரிட்டன் நேரப்படி இன்று காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை பாலாவின் பூதவுடல் அலெக்சாண்டரா மாளிகையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.இவ் இறுதிநிகழ்வில் நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (08 ஆம் பக்கம் பார்க்க)

### உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை ஏழு

வலம்புரி தனது 7 ஆவது அகவையை இன்று பூர்த்தி செய்கிறது.

இதனை முன்னிட்டு வலம்புரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள அன்புள்ளங்கள், விற்பனை முகவர்கள், வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

சிறப்பு மலர் உள்ளே...

## தோட்டத்தொழிலாளர்களுக்குத்தீர்வு சம்பளம் 260 ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளம் 260 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் அலரிமாளிகையில் நேற்று முற்பகல் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பில் தலைவர் லலித் ஒபய சேகரவும் தொழிற் சங்கங்களின் சார்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், இலங்கை தேசிய தோட்ட தொழிற்சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் கே.வேலாயுதம், பெருந்தோட்ட தொழிற்

## நத்தார் பண்டிகையை முன்னிட்டு தாக்குதல்களை நிறுத்த வேண்டும்

### இருதரப்பினரிடமும் நோர்வே வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் வன்முறைகள் தொடர்பில் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள நோர்வே, பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் நலன் கருதியாவது தற்காலிகமாகவேனும் இரு தரப்பினரும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. நோர்வே தெரிவித்துள்ளது.

அத்துடன் வாகரைப் பகுதியில் தொடரும் தாக்குதல்கள், யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை என்பன குறித்தும் நோர்வே கவலை வெளியிட்டுள்ளது. (ச-5)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பில் தலைவர் லலித் ஒபய சேகரவும் தொழிற் சங்கங்களின் சார்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், இலங்கை தேசிய தோட்ட தொழிற்சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் கே.வேலாயுதம், பெருந்தோட்ட தொழிற் சங்க கூட்டமைப்பின் சார்பில் அதன்தலைவர் எஸ் ராமநாதன் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

தோட்டத்தொழிலாளர்களுக்கான அடிப்படைச்சம்பளமாக 170 ரூபாவும் விலைக் கேற்ற கொடுப்பனவாக 20 ரூபாவும் வருகைக் கொடுப்பனவாக 70 ரூபாவுமாக மொத்தம் 260 ரூபா வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும்.தோட்டத்தொழிலாளர்களுக்கு 33 வீத சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் ஆ.யோகராஜன் தெரிவித்தார். (ச)

பொதுமக்களின் நலன் கருதியாவது [illegible] கமாகவேனும் இரு தரப்பினரும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

சமாதான பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் நோர்வே உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமில்லை.

இரு தரப்பினரும் சமாதானத்துக்கான விருப்பத்தையோ சமிக்ஞைகளையோ வெளிப்படுத்தினால் மட்டுமே மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் சாத்தியமாகும் என்று

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்குமிடையிலான கப்பல் சேவை இன்று இடம் பெறவுள்ளது.

இக் கப்பலில் செல்லவுள்ளோர் இன்று காலை 7.30மணிக்கு யாழ்.சிங்கள மகா வித்தியாலயம் முன்பாக கூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கடற்கொந்தளிப்பு அதிகமாகக் காணப்பட்டால் கப்பல் சேவை இடம் பெறமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வவுனியா சாலம்பை குளத்தில் 3 இளைஞர்கள் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா சாலம்பைக்குளம் பிரதேசத்தில் வீடொன்றில் வைத்து மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இனம் தெரியாத ஆயுததாரிகள் இக் கொலையை செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 7.30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் குறித்த வீட்டில் வசித்த 27 வயதுடைய நபர் ஒருவருடன் மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் வசித்து வந்தவர்கள் முன்னர் கிளிநொச்சிப் பிரதேசத்தில் வசித்தவர்களென ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச-9)

# 21 மாணவர்களையும் விடுவிக்குமாறு அம்பாறை சிறப்புத் தளபதி உத்தரவு

## இளந்திரையன் தெரிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 21 மாணவர்களையும் இரு ஆசிரியர்களையும் உடனடியாக விடுவிக்குமாறு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ராம் உத்தரவிட்டுள்ளார் என்று இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் உடனடியாக நீக்கப்பட்டுள்ளனர் என்றும் இது குறித்து விசாரணைகள் நடைபெறுகிறது என்றும் தமிழ் நெற்இணையத்தளத்துக்கு இளந்திரையன் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தை துரதிஷ்டவசமான அத்தியாயம் என இளந்திரையன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் விநாயகபுரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 15 பெண்கள் ,6 ஆண்கள் ஆகிய மொத்தம் 21 (08 ஆம் பக்கம் பார்க்க)

# வல்வெட்டித்துறையில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(துன்னாலை)

வல்வெட்டித்துறையில் வைத்து சிகை அலங்கரிப்பாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

அவர் தனது கடையில் கடமையில் இருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் இதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பிரபாகரன் (வயது 31) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-10)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிபுணர் குழுவின் பரிந்துரையை அரசாங்கம் நிராகரிக்கும்

## தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட 17 பேர் அடங்கிய நிபுணர் குழு பல நாள் ஆய்வுக்குப் பின்னர் தீர்வுத் திட்டப் பரிந்துரைகளைமுன் வைத்துள்ளது.

இந்தப் பரிந்துரைகளை அனைத்துக் கட்சிக் குழுவினால் நிராகரிக்கப்படவுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்தப் பரிந்துரையை முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்களுக்கு உரிய உரிமையையும் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் அனைத்து நிலையிலும் வழங்க வேண்டும் என்பதே இப் பரிந்துரையின் சாராம்சம்.

இந்த 17 பேர் குழுவில் 11 பேர் கையெழுத்திட்ட பரிந்துரை ஒன்றும் இருவர் கையெழுத்திட்ட வெவ்வேறு பரிந்துரைகள் இரண்டும் ஒருவர் சமர்ப்பித்துள்ள பரிந்துரை ஒன்றுமாக மொத்தம் நான்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

இந்தப் பரிந்துரைகளை ஒருங்கிணைத்துத் தருமாறு ஜனாதிபதி மகிந்த கேட்டிருந்தார். எனினும் அதிக அளவில் 11 பேர் கையெழுத்திட்ட பரிந்துரையே அனைத்துக் கட்சிக் குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கருதப்படுகின்றது. (ச)

# இந்தியத் தூதுவர் இன்று ஜனாதிபதியிடம் நியமனக் கடிதத்தைக் கையளிப்பார்

இலங்கைக்கான புதிய இந்திய உயர் ஸ்தானிகரான அலோப் பிரசாத் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தனது நியமனக் கடிதத்தைக் கையளித்து இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக உத்தியோகபூர்வமாகத் தனது பணிகளை ஆரம்பிப்பார் என இந்தியத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கைக்கான உயர் ஸ்தானிகராக முன்னர் பணியாற்றிய நிருபம ராவ் சீனாவிற்குக்கான இந்தியத் தூதுவராகப் பணியேற்றுச் சென்ற பின்னர் இந்திய அரசினால் அலோப் பிரசாத் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராகக் கடந்த ஒக்டோபர் மாதம் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தனது உரிய பணியை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு அலோப் பிரசாத் கடந்த வாரம் இலங்கை வந்து சேர்ந்தார். (ச-5)

# கிளைமோர் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் செங்கலடியில் இரண்டு கிளைமோர்க் குண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்து இந்தக் குண்டுகள் வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-9)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும்

## சர்வதேச சட்டவியலாளர் ஆணைக்குழு கோரிக்கை

பயங்கரவாதத் தடையின் பொருட்டு அண்மையில் கொண்டு வரப்பட்ட புதிய சட்ட விதிகளைத் திருத்துமாறு சர்வதேச சட்ட வியலாளர்கள் ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அமைதியானதும் சட்ட எல்லைக்குட்பட்டதுமான செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாவிதத்தில் திருத்தத்தைக் கொண்டுவருமாறு ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

மனிதாபிமான அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு புதிய விதிகள் மூலம் இடையூறு ஏற்படலாம் எனத் தெரிவித்து சர்வதேச சட்டவியலாளர்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

புதிய விதிமுறைகள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்யுமாறு ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

எனினும் இலங்கை பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக ஏற்றுக் கொள்வதாகவும் சட்டவியலாளர்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

ஹெறாப்பொத்தானை பொலாவில் சிவில் மக்கள் கொல்லப்பட்டமை, அரசாங்கச் சமாதான செயலகத்தின் பிரதித் தலைவர் கொல்லப்பட்டமை மற்றும் பாதுகாப்புச் செயலரை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டமை போன்ற சம்பவங்கள் மூலம் இந்த அச்சுறுத்தல்கள் புலப்படுவதாக சர்வதேச சட்டவியலாளர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ச-133)

# ஊர்காவற்றுறையில் இருவர் கைது

ஊர்காவற்றுறைப் பருத்தியடைப்புக் கடற்பகுதியில் வைத்து நேற்றுமுன்தினமிரவு இரு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த போது 10.45 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்கள் ப.மோகனதாஸ் (வயது-28), க.சுஜேந்திரன் (வயது-36) என்ற இருவரும் இளம்குடும்பஸ்தர்கள் என தெரிவிக்கப்பட்டது. (ச-72)

# 2007ஆம் ஆண்டு முதல் பருவ காலச் சீட்டு

பாடசாலை மாணவர்களுக்கான பருவ காலச் சீட்டுக்கள் அடுத்த ஆண்டுமுதல் கட்டணத்துக்கு வழங்கப்படவுள்ளது. எனவே யாழ்.குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் முன்னர் கட்டணம் செலுத்தி பருவ காலச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்ட வழிமுறையைப் பின்பற்றி அடுத்த வருட பருவ காலச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு இ.போ.ச.யாழ்.சாலை செயலாற்று முகாமையாளர் கமலநாதன் தெரிவித்துள்ளார். (ச-9)

# கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்

## மாணவர் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 15.12.2006 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுள்ளார்.

இக் கடத்தல் சம்பவமானது அரசின் பூரண கட்டுப்பாட்டின்கீழுள்ள கொழும்பில் இடம்பெற்றுள்ளது. தமிழர்களது கல்வியைச் சீரழித்து தமிழ்க் கல்வியாளர்களையும் புத்திஜீவிகளையும் கடத்தியும் கொலை செய்தும் அச்சுறுத்தியும் வரும் அரசு, அதனை தற்போது விரைவுபடுத்தியுள்ளது.

அதில் ஒரு அங்கமாகவே கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கடத்தலை கருத முடியும். கடந்த சில வாரங்களாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அதன் பின்னரே இவர் கடத்தப்பட்டுள்ளார்.

இக் கடத்தலுக்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும். எனவே கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தரை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர்களைப் பதியக் கோரிக்கை

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலில் இதுவரை பெயர்களைப் பதிவு செய்து கொள்ள முடியாதவர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை பெயர்களைப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் பலர் இருப்பதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அவர்களுடைய பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் கையளிக்க முடியும். திருத்தங்களின் போது உள்ளடக்கப்படும் பெயர்கள் தொடர்பான ஆட்சேபனைகளில் தெரிவிக்கவும் தற்போது சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கான கால அவகாசம் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருத்தம் மேற்கொள்ளப்பட்ட 2006 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பெயர் பட்டியல் மே மாதமளவில் அங்கீகரிக்கப்படவுள்ளது.

அதனையடுத்து இடம்பெறவுள்ள தேர்தலுக்கு இந்தப் புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ச-9)

# யாழ்.குடாநாட்டுப் பிரச்சினைகள் விரைவில் தீர்த்து வைக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

பொதுமக்களின் அனைத்துத் தேவைகளையும் இயன்ற வரையில் பூர்த்தி செய்து யாழ்.குடாநாட்டில் கூடிய விரைவில் சுமுகமானதொரு நிலையை தோற்றுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தங்களது பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் முகமாக அமைச்சரின் யாழ்.அலுவலகத்திற்கு திரண்டு வந்திருந்த பொதுமக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்ததாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்கள் தற்போதைய சூழ்நிலையில் முகம் கொடுத்து வருகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அன்றாடம் நேரடியாகவே தான் அறிந்து வருவதாகவும் இம் மக்களது அனைத்துப் பிரச்சினைகளையும் தன்னால் இயன்றவரைத் தீர்த்து வைப்பதற்காகவே தான் தொடர்ந்தும் யாழ்.நகரில் தங்கியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

உடனுக்குடன் தீர்வுகளைக் காணத்தக்க பிரச்சினைகள் அனைத்தும் அவ்வப்போது தீர்க்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் மேலும் சில பிரச்சினைகள் கூடிய விரைவில் தீர்க்கப்பட்டு பொதுமக்கள் நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடிய சூழல் விரைவில் ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கை தனக்குஇருப்பதாகவும் தெரிவித்ததாக கூறப்பட்டது. (எ)


# தமிழ் அன்னையின் ஆணையாக வேண்டுகோள்

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சி.ரவீந்திரநாத் அவர்களைத் தடுத்து வைத்திருப்போருக்குத் தமிழ் அன்னையின் ஆணையாக பின்வரும் விடயங்களை உருக்கமாக முன் வைக்கின்றோம்.

☆ பேராசிரியர் ரவீந்திரநாத் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட சகபாடி. கடந்த 33 வருடங்களாக தொடர்புடைய நண்பன். அவரது உத்தம குணம், பண்பு என்பவற்றால் கவரப்பட்டவன் நான். எனது இரண்டாவது மகனுக்கு அவரது பெயரைச் சூட்டி அவரைப் போல் எனது மகனும் ஒழுக்க சீலராக வரவேண்டும் என்று விரும்பியவன்.

☆ பேராசிரியர் தமிழ் அன்னையின் விருப்பத்துக்குரிய மனிதன் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தமிழ் மண்ணை நேசித்தவர். வெளிநாட்டு உயர் பதவிகள், உழைப்புக்கள் கிடைத்த போதும் அதனைப் புறந்தள்ளி எம்மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற பேரவாக் கொண்டவர்.

☆ அவர் வகித்த உயர் பதவி காரணமாக அவர் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாமல் போயிருக்கலாம். அவர் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்திருக்கலாம்.

☆ அவரது தவறை மன்னித்து அவரைவிடுவிக்க வேண்டியதுதான் இன்றைய காலத்தின் தேவையாகும். இவ்வேண்டுகோளை தமிழ் அன்னையின் ஆணையாக கேட்டுக் கொள்கிறோம்.

☆ 'கல்லுக்குள் ஈரம்...' என்ற முது மொழிச் சொற்றொடருக்கு அமைய பேராசிரியரைத் தடுத்து வைத்திருப்பவர்கள் நடப்பார்கள் என்ற பூரண நம்பிக்கையில் தமிழ் அன்னையின் ஆணையாக மீண்டும் மீண்டும் தயவாகவும் தாழ்மையாகவும் மன்றாட்டமாக கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்கத்தின் வீடு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி,
021 226 3321.

திரு.திருமதி ப.ஈஸ்வரநாதன்
மக்கள்;
ஈ.கோபிநாத்,
ஈ.ரவீந்திரநாத்.

(c-A-607)



# போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

## 2007 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் வழங்குநர்கள், சேவைகள் வழங்குநர்கள் ஆகியோரைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குப் பொருள்கள் வழங்குநர்கள், சேவைகள் வழங்குநர்கள் ஆகியோரைப் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 15.12.2006இல் இருந்து 26.12.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் தமது பதிவுகளை 26.12.2006 பி.ப. 4 மணிக்கு முன்னர் எமது காரியாலயத்தில் பதிவு செய்யவும்.

மேலும் விபரங்களுக்கு 13.11.2006, 14.11.2006 ஆகிய திகதிகளில் பிரசுரமாகிய எமது விளம்பரங்களை பார்க்கவும்.

*வைத்திய கலாநிதி ஏ.ஈ.ஞானஜோதி*
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(c-A-608)

# வலம்புரியின் 7ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர் 20.12.2006

# வாழ்க! வாழ்க!
# வலம்புரியே பல்லாண்டு வாழ்க!



## வலம்புரி வாழி பல்லாண்டே!

நடுவு நிலை யெனும்
நெறிதனில் நடந்து
நாளும் நானிலம்
நிகழ்த்தும் நிகழ்வெலாம்
நற்றமிழ் நடையில்
நமக்கு நல்கிடும்
நல்லிதழே நீ!
நீடு வாழ்க!!

## வலம்புரியே வாழ்க பல்லாண்டு

சிந்தனைச் சிற்பியாய் சிறப்புடன் மலர்ந்து
சீரான பணிபுரியும் எம் சிந்தனைப் பெட்டகமே!
உந்தனை வாழ்த்திட உள்ளமே இனிக்கின்றதே
உன்னதமாய் வாழ்க உலகெலாம் இசைபரப்பியே!
கந்தனைக் கரங்குவித்தே கவின்பெறு சேவையாற்றி
களிபேருவகையுடன் வாழ்க நீ பல்லாண்டே!
வந்தனை செய்தோம் "வலம்புரியே" வாழ்க வாழ்க
வாழ்த்துகின்றோம் உனையே பல்லாண்டு வாழியவே!

கண்ணியத்தையே உனது கருந்தனமாய்க் கொண்டு
கடமையும் கட்டுப்பாடும் காசினியில் துலங்கிட
புண்ணியத்தையே செய்யும் புதினப்பத்திரிகையே நீ வாழ்க!
புகழேணியின் உச்சியில் நாதமெழுப்பி நீ வளர்க!
எண்ணியதை முடித்திடும் எழிலான உன் சேவை
எட்டாவது ஆண்டில் ஏழிசையாய் ஒலிக்கட்டும்!
மண்ணிலே நின் புகழ் மாண்புடன் நிலைத்திடவே
மனமார வாழ்த்துகிறோம் வலம்புரியே வாழ்க பல்லாண்டு!

*சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.*

## ஐங்கரன் துணையால் என்றென்றும் வாழ்வாய்

*தசாப்தங்கள் கூடி சகாப்தங்கள் மேவ*
*சான்றாண்மை யோடு சால நடப்பாய்*
*இன்றொரு தகவல் புனிதமாய் தருவாய்*
*என்றும் ஏற்றமாய் விளங்கிடுவாயே*
*ஏழு ஆண்டுகள் தேறிய நிலையில்*
*பேறாய் எம் கரம் தவழுகின்றாயே*
*நாதம் முழங்க நகர்ந்த நல் ஏடே*
*வாதம் வம்புகள் விரவிய போதும்*
*வீரம் செறிந்து விறலொடு திகழ்ந்தாய்*
*பேரம் பேச ஒண்ணா நடுநிலை*
*சாரம் சேர கருத்துகள் உரைப்பாய்*
*தீரனே வாழ்க திசையெலாம் வென்றே*

*தேறா மனத்தொடு தெல்வர்கள் உலவ*
*எட்டாம் ஆண்டில் எடுத்தடி வைக்கின்றாய்*
*ஐங்கரன் துணையால் ஆறுமுகன் ஆசியால்*
*இங்கித ஏடே எங்கரம் தவழ்வாய்*

*வெற்றி உன்பக்கம் வாழ்வும் உனதே*
*நற்றமிழ் மேவ விஜயம் செய்குவை*
*சுந்தர நாளிதழ் சுபீட்சமடைந்தே*
*மந்தர மாலென வாழ்க பல்லாண்டு!*

## இயற்கையும் இளைய கன்னியும்

பெண் பார்க்கும் படலம்
அச்சத்தில் படபடத்த கால்கள்
வெட்கத்தில்
அந்திவானமான முகம்
சிறுமாரியாய் கொட்டிய
வியர்வைத் துளிகள்
மின்னலென வெட்டிய
விழிகளின் படபடப்பு
பாலையின் வரட்சி
நாக்கை நனைக்க
இனந்தெரியாத இடிமுழக்கம்
இதயத்துள் துடிக்க
எதிர்பார்ப்புக்களுடன் வந்த
ஏழு லட்சம் சீதனம் எதிர்வீட்டு அக்காவை
ஏமாற்றத்தில் தள்ளியதில்
சூழ்ந்தது சூறாவளி
அவள் கண்ணில்
துளிர்கின்றது நீர்த்துளி.

## இமயமென நீடுவாழி!

முத்த குடியினர் முடி புனைந்தேத்திய முத்தமிழின் சீர் பேர்பாடி
பத்திரிகாதர்மம் காத்து நாளும் பாரில் நிகழ் பல சேதிகளை
சத்தியத்தின் நெறியுற்றி சீராய் சமன் செய்யும் துலா கோலென
முத்திரை பதித்து சுவை மிகு முக்கனியென சுந்தர மொழிக்கு
முத்தாரம் சூட்டி மகிழும் வலம்புரியே ஏழாண்டை
நிறைவுசெய்து இத்தரையில் ஈடில்லா பணி செய்தே இமயமென
வளர்ந்தே நீடு வாழி!

## தாய்க்கு ஒரு வாழ்த்து

*வலம்புரித்தாயே எம் மண்*
*நலமுடன் தழைத்திடவே*
*நல் சேதிகள் தந்தாய்*
*மெல்ல மெல்ல வளர்ந்தாய்*
*செல்லப்பிள்ளையாகவே*
*சங்குநாதத்தினை ஈன்றெடுத்தாய்*
*எங்கள் கரங்கள் குளிர்ந்தனவே*
*என்றும் இனிது வாழி!*

## வாழி வாழி

*சங்கெட்டை எடுத்தூதும் வலம்புரியே*
*சங்கதிகள் பலசொல்லி வளர்ந்தாயே*
*பொங்கட்டும் உன் பணிகள் நடுநிலைமை*
*போதாகி மணம்பரப்பிப் புவிமீது*
*அங்கிங்கு அறிவலைகள் தான் பரப்பி*
*ஆட்கொள்ளும் வலம்புரியே நீடுவாழி*
*எங்கென்றும் பண்பரப்பி எழிலோடும்*
*ஏறுநடை போட்டினிது வாழிவாழி.*

*கலாபூஷணம் சு. துரைசிங்கம்*

## ஏழாண்டை நிறைவு செய்யும் வலம்புரியே வாழிய நீ!

*கலங்கலும் கரைசேர கோபுர ஒளியாய்*
*கதிரவன் ஒளிதர கைகளில் தவழும்*
*வலம்புரி எனும் சேதி எம்புல பத்திரிகை*
*விளைந்துமே பாதங்கள் பதித்தேழு*
*ஆண்டின்று*
*உலகியல்தேடலும்உள்ளூர்நிலைகளும்*
*இரப்பவர்வாழ்நிலைஅகற்றிடஉரைப்பதும்*
*பலமுடன் பந்தியில் பொதியும் பாங்கினை*
*பேற்றுடை 'வலம்புரி' பல்லாண்டு வாழி.*

*அல்வையூர் கே. ஆர். திருத்துவராஜா*

## அகிலம் போற்றிட வாழ்க!

*இம் மண்ணின் மைந்தனாய்*
*மலர்ந்துவிட்ட வலம்புரியே*
*அறிவால் வழி கடந்து*
*அணையா ஒளிச் சுடராய்*
*அகிலம் போற்றிட*
*நிமிர்ந்து நிற்கும்*
*அன்பு வலம்புரியே – உன்*
*உள்ளத்துணர்வுகளை*
*எம் இதயத்தில் புகுத்தி விட்ட*
*அன்பு மலரே*
*என்றும் என் நிறைவான*
*ஜனன தின வாழ்த்துக்கள்*
*வாழ்க! வாழ்க! வாழ்க!*

## இலட்சியம் காக்க வாழ்த்துக்கள்

மொழி நடை அழகினில் வலம்புரி
நிலம் சுமக்க வாழ்த்துக்கள்
ஒளிவளர் எழுத்தினில் வலம்புரி
பலம் சுமக்க வாழ்த்துக்கள்
தமிழ் மொழி இனிமையில் வலம்புரி
தாகம் தீர்க்க வாழ்த்துக்கள்
தாய் மொழி இளமையில் வலம்புரி
தரம் பேணிட வாழ்த்துக்கள்
சூரியன் விழித்ததும் ஒலித்திடும் வலம்புரி
தோகை மயிலாக வாழ்த்துக்கள்
இருளைக்கலைக்க எழுதிடும் வலம்புரி
இலட்சியம் காக்க வாழ்த்துக்கள் .

## தேசமெங்கும் வாழியவே

முத்தான வலம்புரியே முழுநிலவே வலம்புரியே
சத்தான செய்திகளை சத்தியத்தின் வழியினிலே
நித்தமும் தாங்கிவரும் நீள்புகழ் வலம்புரியே
இத்தரை மீதினிலே இனிதுறவே நீ வாழியவே!

புதுமையும் இளமையும் நடு நிலமையும்
புவனமிசை கொண்ட வண்ண வலம்புரியே
வண்டமிழ் தன்னை வளர்த்திடும் வலம்புரியே
எண்டிசையும் புகழ்பரப்பி இனிதுறவே வாழியவே!

தோன்றிற் புகழுடன் தோன்றிய வலம்புரியே
ஏழாண்டு என்ன ஏழாண்டும் கடந்து
சான்றோரின் நெஞ்சிலும் தமிழரெம் நெஞ்சிலும்
தேன்தமிழ் வளர்த்தே தேசமெங்கும் வாழியவே!

## பொலிவாய் வலம் புரிந்திடுவாய்!

முத்தான ஏழாண்டுகளை
முழுவதுமாய் நீ நிறைத்து
சொத்தாக தமிழ் நிலத்தில்
சொந்தமானாய் வலம்புரியே!
சங்கமமாய்க் கலை வளர்த்து
பொங்கும் நிறை வளத்துடனே
பொலிவாய் வலம் புரிந்திடுவாய்!
உன் பணிகள் தொடர்வதற்கு
உள்ளமதில் நிறைவுடனே
இந்நாளில் நாங்களெல்லாம்
இனிதாய் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## வலம்புரி வாழ்க! வளர்க! பல்லாண்டு!

*காலையில் வரவு கண்டு*
*களிப்புடன் கரங்கள் நீட்டி*
*கைகளிற் பற்றிக் கண்களால்*
*நோக்கும்போது*
*கனகன புதினம் யாவும்*
*கவர்ச்சியாய்த் தரும் நல்ஏடே*

*எமையெல்லாம் தேடிவர*
*இரவெலாம் விழித்திருந்து*
*எத்தனை துயர்பட்டாயோ*
*காலையில் கண்ட உன்னை*
*கடமைகள் ஒதுக்கிவிட்டு*
*கவனமாய் உன்முகப்பை*
*கண்ணோட்டம் விட்டபின்பே*

*எம் கடமைகள் தொடர்வோம்*
*ஆண்டுகள் ஏழாக அல்லல்பலபட்டும்*
*அனுபவ ஆற்றலாலும்*
*ஆதரவாளராலும்*
*அழகுநடை போடுகின்றாய்*
*எட்டாவதாண்டில்*
*எட்டி அடிவைக்கும்*
*ஏற்றமது கண்டு*
*மட்டற்ற மகிழ்வுடன்*
*வாழ்த்துகின்றோம்!*
*வலம்புரியே வாழ்கபல்லாண்டு!*
*வளர்க உன்பணி!*
*ஞாலத்தில் தனித்துவமாய்*
*நலமே வளர்ந்திடுக!*

*நீர்வை மணி*

## வலம்புரியே வாழி!

*உரமான செய்திகளை*
*உதயம் தவறாமல்*
*உன்னதமாகத் தரும்*
*உளம் நிறைந்த*
*வலம்புரியே...*
*வாழி... வாழி...*

*வயதோ ஏழு*
*வளர்ச்சியோ பெருமலை!*
*வளமான எதிர்காலம்*
*வளர்க வலம்புரியே*
*வாழி... வாழி...*

*உதய வேளையில்*
*உள்ளம் களிக்க*
*உலவும் வலம்புரி*
*நீடு வாழ்க என*
*நிமலனைத் துதிக்கிறோம்*

*ரோகிணி*

## இமயமாய் வாழ் நீ!

வாழ்வினில் விளக்கேற்ற
வந்திட்ட வலம்புரியே!
ஞாலத்தில் உயர்ந்து
நிற்கின்ற வலம்புரியே!
உண்மையாய் செய்திகள்
உலகினில் தருகிறாய்
அனைவரின் வாழ்விலும்
நீ இடம் பிடிக்கிறாய்
இதயங்கள் தோறும்
நீ வலம் வரனும்
இமயமாய்உலகில்
வாழனும் நீ யென்றும் வாழ்க

## நெகிழ்ந்தோம் பல்லாண்டு வாழி

புகழ்ந்தோம் வலம்புரிநின்
நற்பணியை நாளும் நாம்
மகிழ்ந்தோம் ஏழாண்டில்
உன்வளர்ச்சித் திறம் கண்டு
நெகிழ்ந்தோம் பல்லாண்டு
வாழ்கவென வாழ்த்தி இன்று
இகழ்வாய் அநீதிகளை பொய்மைகளை
நடுநிலையோடு நின்று
திகழ்வாய் ஊரெங்கும் உண்மையுள்ள
உயர்வுடைய நாளிதழாய்

# வலம்புரியின் 7ஆவது ஆண்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன அருளாசிச் செய்தி



வலம்புரி நாளிதழுக்கு இன்று ஏழாவது பிறந்த நாள். தனது வளமான சேவையின் ஏழு ஆண்டுகளினைப் பூர்த்தி செய்து எட்டாவது ஆண்டில் பிரவேசிக்கும் இனிய ஒரு பொன்னாள். யாழ். மண்ணில் வெளிவந்து நடந்த நடைபெறுகின்ற நடக்கப் போகின்ற நிகழ்வு பற்றியும் மற்றும் பிரதான முக்கிய விடயங்களினையும் அவ்வப்போது அறியத்தந்து அளப்பரிய சேவையாற்றி சாதனை படைத்து வெற்றிப்பாதையில் வீறு நடைபோடும் வலம்புரிக்கு எமது நல் வாழ்த்துக்கள்! கடலிலே கிடைக்கும் அரியதொரு பொருள் வலம்புரிச் சங்கு, அதே போன்று யாழ். மக்களின் கரங்களை அலங்கரிக்கும் அருமையான பத்திரிகை "வலம்புரி" என்றால் அது சாலப் பொருந்தும். உலகியல் வாழ்க்கையில் நன்மை தீமைகளை சுட்டிக் காட்டி மக்களின் நல்வாழ்வுக்கு நாதமிசைத்துக் கட்டியங்கூறி நிற்கும் வலம்புரி தொடர்ந்து வெளிவந்து நற்பணியாற்ற வேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து எல்லாம் வல்ல பரம்பொருளாம் நல்லைக் கந்தனை பிரார்த்தித்து உளமார மகிழ்ந்து நல்லாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வலம்புரி வளம் பெற உழைக்கும் நிர்வாகத்தினர், நிருபர், பணிபுரிவோர், ஆசிரிய பீடத்தினர் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். வலம்புரி– சங்குநாதம் வானுயரப் பரந்து திக்கெட்டும் ஒலிபரப்பி இணையிலா நாதமாய் எப்போதும் ஜொலிக்க வேண் டும். "போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் எல்லாம் போகட்டும் கண்ணனுக்கே" என்றபடி வெளிவந்து நடுநிலையாய் நின்று நற்பணி புரிந்து நன்னெறி காத்து நாடு போற்ற நாளும் வளர்ந்து செழிப்புற்றோங்க வேண்டும் என்பதே எமது அவா.

"வலம்புரியே நீ வளமுடன் வாழ்க"

"வலம்புரி நாளிதழ் நல்ல வளம் பல பெற்றே
நலந்தரு மிதழாய் நானிலத்தில் நற்றமிழ் வளர
பலந்தரு மொரு பல்சுவை தந்து பார்புகழ்
நிலந்தனில் ஒலித்து நீடுவாழ்க பல்லாண்டே!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்**
*நல்லை ஆதீன முதல்வர்*

## யாழ். அரச அதிபரின் ஆசிச் செய்தி



இன்று யாழ். மாவட்ட மக்களின் அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் பத்திரிகைகள் கணிசமான பங்கை வகிக்கின்றன. மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளவும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார சூழ்நிலையைப் புரிந்து கொள்ளவும், எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஒவ்வொரு குடும்பத்தினதும் இழப்புத் துயரை வெளிப்படுத்தவும், வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் கூட பத்திரிகைகள் களம் அமைக்கின்றன.

இவ்வகையில் ஐந்து ஊர் கேட்டும் இல்லை என்ற கௌரவர் மேல் பாண்டவர் போர் தொடுத்தபோது அர்ச்சுனனால் ஒலி எழுப்பப்பட்ட சங்கின் ஓசை போல் வலம்புரியும் பிறப்பெடுத்ததெனலாம். இன்று இழப்புக்கள் பலவுற்றாலும் நொந்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப எத்தணிக்கும் மக்களிடையே தன் எட்டாவது அகவையில் கால்டி பதிக்கிறது "வலம்புரி"

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்னும் இறை தத்துவத்திற்கேற்ப நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் கொள்கைக்கேற்ப வாசகர்களின் அறிவு ஆளுமை, ஆற்றல்களை, சிந்தனைப்பாங்கை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில் "வலம்புரி" நாளிதழ் தன் பணியைச் செவ்வனே செய்கின்றது.

அதற்கு என் உளமார்ந்த ஆசிகள் என்றும் உரித்தாகட்டும்.

**க.கணேஷ்**
அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## இந்து மத குருபீடாதிபதியின் ஆசிச் செய்தி



வலம்புரி நாளிதழ் தனது ஏழாவது வயதினை கச்சிதமாக நிறைவு செய்து இன்றைய நாள் எட்டாவது வயதை எய்துகின்றது. உலகத்தைக் காக்கும் கடவுளாகிய விஷ்ணு, கைகளிலே சங்கு சக்கரம் தாங்கி மக்களின் துன்பங்களை நீக்கத் திருவுளம் கொண்டுள்ளதைப் போல அதே நாமத்துடன் விளங்கும் "வலம்புரி" நாளிதழ் மக்களின் கைகளில் காலையில் குவியும் போது கிருஷ்ணபரமாத்மாவின் ஆசிகளும் அதனூடாக கிடைக்கும் செய்திகளும் ஆன்மீக அறிவுகளும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது.

இன்றைய காலகட்டத்தில் வலம்புரி எத்தனையோ கஷ்டங்களின் மத்தியிலும் தலை நிமிர்ந்து கலங்கரை விளக்காக மக்களுக்கு சேவையாற்றுவது மிகவும் வரவேற்கத்தக்கது.

ஆசிரியர் தலையங்கத்திலும் ஆன்மமீக தொடர்புடைய பல கதைகள் தொடர்புபடுத்தப்படுவது மக்களின் அறிவுக்கு மென் மேலும் ஊக்கமளிக்கின்றது.


மேலும் வலம்புரி நாளிதழ் நவீன வசதியுடனும் நல்ல சேவையாற்ற வேண்டும் எனவும் ஸ்தாபனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் நற்சுகத்துடனும் நீண்ட ஆயுளுடனும் திறம்பட சேவையாற்றும் திறனை வலம்புரிக்கு அருள வேண்டும் எனவும் எல்லாம் வல்ல அம்பாளை பிரார்த்தித்து நல் ஆசி கூறுகின்றேன்.

"ஸர்வே ஜன" சுகினோ பவந்து

**கிரியா கலாப முக்தாமணி**
**ச.மஹேஸ்வரக் குருக்கள்**

## பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வளர்ச்சி காணும் வலம்புரி!

### முன்னாள் துணைவேந்தர் வாழ்த்துரை



வலம்புரியின் 7ஆவது ஆண்டுச் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த 7 ஆண்டு கால யாழ்ப்பாண வரலாறு மிகவும் துன்பங்கள், துயரங்கள், சிறு நம்பிக்கைகள், ஏமாற்றங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் சிறு பிராந்திய நிறுவனங்கள் தங்கள் இருப்பைத் தக்க வைக்க பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தன. பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வலம்புரி தொடர்ந்தும் சிறப்பான, நம்பிக்கையான செய்திகளுடன் வெளிவந்து கொண்டிருப்பது சாதனைகளாகவே கருத வேண்டும். மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்ற இலட்சிய பாதையிலிருந்து விலகாது வலம்புரி நிறுவனம் ஆற்றும் சேவை மிகவும் பாராட்டத்தக்கது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, அரசியல் மேம்பாட்டுக்கு வலம்புரியின் பங்கு முக்கியமாக இருக்கிறது. உங்கள் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
*முன்னாள் துணைவேந்தர்*

## போற்றுதற்குரிய நடுவுநிலை பண்பு

### யாழ். மாநகர ஆணையாளரின் வாழ்த்துரை

வலம்புரி – சங்குநாதம் பத்திரிகையின் 7 ஆவது ஆண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் மகிழ்வெய்துகின்றேன்.

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்திருந்த நேரத்தில் பிரசவித்து, அதே சூழ்நிலை தொடர்ந்துகொண்டிருக்கும் இவ் வேளையில் தனது 7 ஆவது வயதை எட்டிநிற்கும் வலம்புரி பத்திரிகையின் நடுவு நிலைப் பண்பு பெரிதும் போற்றுதற்குரியதாகும். பத்திரிகைத் துறையின் பணி மற்றும் பொறுப்பினை நன்குணர்ந்து தூரநோக்கோடு பணியாற்றிவரும் வலம்புரி மேன்மேலும் வளர்ந்து மக்கள் மத்தியில் நீங்காத இடத்தினைப் பிடித்து, காலை எழுந்தவுடன் வலம்புரி படிக்க வேண்டுமென்ற அவாவினை அனைவர் மனத்திலும் தூண்டும் வண்ணம் செழிப்புற்று வளர வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**மு.செ.சரவணபவ**
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்

## அறச்சிந்தனையை வெளிப்படுத்தும் வலம்புரி நாளிதழ்

### சிவத்தமிழ் அன்னையின் ஆசிச்செய்தி



பத்திரிகா தர்மத்தைப் பேணி தினமும் வெளிவரும் நமது மண்ணின் செய்தி இதழான வலம்புரி தமிழ் மண்ணுக்கு உரம் ஊட்டும் ஒரு செய்தித்தாள் ஆகும்.

அறச் சிந்தனையை வெளிப்படுத்தி நாள்தோறும் நிகழுகின்ற செய்திகளை உண்மையும் ஒழுங்கும் நில வக் கூடியதாக தமிழ் மக்களுக்கு உணர வைப்பது வலம்புரி ஆகும்.

வலம்புரி என்ற நாமம் எமது செவிகளுக்கு தித்திக்கும் ஒரு நாமம் ஆகும். இந்த நாமத்தைத் தாங்கி வரும் செய்தித் தாளும் வாசகர்களை மகிழ வைப்ப தாகும் : எனவே தொடர்ந்து வலம்புரிச் செய்தித் தாள் இம் மண்ணை பெருமை பெற வைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

*சமாதான நீதிபதி , தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை*

## தென் இந்திய திருச்சபை பேராயரின் வாழ்த்துரை



வலம்புரி பத்திரிகை ஏழு ஆண்டு சேவையை முடித்து எட்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளமை தமிழ் மக்கள் அனைவருக்குமே மன நிறைவு தரும் செய்தியாகும். கடந்த காலங்களில் "வலம்புரி" எதிர்நோக்கிய சவால்கள் அனேகம் . எல்லாவற்றையும் எதிர்கொண்டு ஜெயித்து ஒரு தரமான பத்திரிகையாக இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் உலாவி வருகின்றது.

வலம்புரியின் வார இதழாகிய "சங்குநாதம்" சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்காக வும் கலாசார முன்னேற்றத்துக்காகவும் செய்துவரும் ஸபணி மகத்தானது. வலம்புரி எமது மண்ணில் நிலையாக நிலைத்து நிற்கும் என்பதற்கு அதன் கடந்த கால வரலாறே சான்றாகும்.

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு இன்னொரு தினசரி கிடைத்துவிட்டது என்று குதூகலமடையும் இந் நேரத்தில் தொடர்ந்தும் அதன் நற்பணி வளர இறைவனை வேண்டுகின்றேன்.

**அதி வண. கலாநிதி டி.எஸ்.தியாகராஜா**

**பேராயர்**

**தென்இந்திய திருச்சபை- யாழ்.ஆதீனம்**

## ஏழு ஆண்டு பயணத்தில்

உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை ஏழு.

ஏழு வருடப் பயணத்தில் வலம்புரி சந்தித்த சவால்கள் எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் ஏராளம். சவால்களும் அச்சுறுத்தல்களும் வெளியில் இருந்து வந்தவை யல்ல. வியாபார போட்டியின் நிமித்தம் எழுந்தவையே அவை.

வலம்புரியின் உயிர் மூச்சை நசுக்கிவிட்டால் எல்லாம் சரி என்று நினைப்பதை விட தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கும் உயரிய எண்ணம் ஊற்றெடுக்க வேண்டும். எல்லோரும் வாழ நினைப்பதுவே அரிய மானிடப்பிறவியை நமக்குத் தந்த இறைவனுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

ஏழு வருடங்கள் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கின்றோம். ஓ! இறைவா எங்களோடு உன் துணையும் இருந்தது. ஏழு ஆண்டுகள் அதுவும் யாழ்.குடாநாட்டில் ஏழு ஆண்டுகள் என்பது சாதாரணமான காலமல்ல. இந்த இக்கட்டான காலத்தில் பத்திரிகையை நடத்துவது என்பதை எவரும் சாதாரணமாக எடை போட்டுவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

### தங்குமிடம் கொடுத்து தாங்கிய விருட்சம்

ஏழு ஆண்டுகளை நிறைவு செய்து எட்டாவது ஆண்டில் காலடி வைக்கும் வலம்புரி என்ற விருட்சத்தில் தங்கியிருந்தவர்கள் பலர். வெயிலுக்கும் மழைக்கும் கடுங் காற்றுக்கும் இதைவிட்டால் வேறு வழி யில்லை என நினைத்தவர்கள் பின்னாளில் நஞ்சு மரங்களை நாடிப் பறந்து சென்றதையிட்டு கவலை கொள்ளவில்லை. ஆனால் இருந்த விருட்சத்தின் வேரையே அறுக்க நினைத்தார்களே இதைவிட கயமைத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது.

இத்தகைய கயமைத்தனங்கள் இன்று நேற்றல்ல காலாகால மாக தொடரும் நோய் என்ற வகையில் அதை ஒரு புறம் ஒதுக்கி வைத்துக் கொள்ளலாம்.

### நடுவு நிலையில் தன் பணி தொடரும்

எத்தனையோ இடர்கள், இடைஞ்சல்களை சந்தித்த வலம்புரி அவற் றையெல்லாம் சவால்களாகவே எடுத்துக்கொண்டது. அதன் விளைவு தான் இன்று எட்டாவது ஆண்டில் அதன் பொற்பாதம் தடம் பதிக்கின்றது. வாசகர் பெருமக்களின் அப்பழுக்கற்ற ஆதரவும் வர்த்தகப் பெருமக்களின் விளம்பரமும், அறிஞர்கள், தகைசான்ற பெரியவர்களின் ஒத்துழைப்புமே வலம்புரியின் வீறு நடைக்கு உதவுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாம் வல்ல பரம்பொருளின் பெருந்துணை நம்மை வழிப்படுத்துகின்ற தெனலாம்.


எதுவாயினும் குடாநாட்டு மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துப் போய்விட்ட வலம்புரி தனது பணியை நடு நிலை நின்று ஆற்றும் என்பதை இவ்விடத்தில் உறுதி கூறிக்கொள்கிறோம்.

மேலும் வலம்புரியின் வளர்ச்சியில் சதா அக்கறை கொண்டுள்ள அன்புள் ளங்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றி கள் உரித்தாகட்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வலம்புரியை வழிநடத்தும் வலம்புரிக் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் இந்நாளில் வாழ்த்துக்களையும் நன்றி களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

## யாழ். ஆயரின் ஆசிச் செய்தி



வலம்புரிப் பத்திரிகை 7 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது என் பது ஒரு மகிழ்வான செய்தியாகும்.

இப் பத்திரிகை தனது 8ஆவது ஆண்டினை ஆரம்பிக்கும் வேளை வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவிப்பதில் மகிழ்ச் சியடைகிறோம்.

இன்று பத்திரிகைப் பணி ஒரு சவாலான அதேவேளை பயங்கரமான பணியாக மாறி யுள்ளது. பத்திரிகை வெளியிடுவதற்கான பொருட்களைப் பெற்றுக்கொள்வது ஒரு கடின மான வேலையாக உள்ளது. இவ்வாறு பத்திரிகைப் பணியை மேற்கொள்வதில் பல இடர் பாடுகளும் தடைகளும் இருக்கின்ற வேளை தொடர்ந்தும் இப் பத்திரிகை வெளிவர வேண்டும் என்பதில் வலம்புரி நிர்வாகத்தினர் உறுதியாக இருப்பது வரவேற்று பாராட்டப்பட வேண்டி யதாகும். இனிவரும் காலத்திலும் இப் பத்திரிகை தன் பணியை நடுநிலையோடு சிறப்பாக ஆற்ற வேண்டுமென விரும்புகிறோம்.

இவ்வேளை, வலம்புரிப் பத்திரிகை ஆசிரியர் , பணியாளர்கள் , பத்திரிகையாளர்கள் அனை வருக்கும் வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவிக்கின்றோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**

**யாழ். ஆயர்**

## முன்னாள் பேராயரின் ஆசிச்செய்தி



நாம் வாழும் உலகின் ஒருநாள் வரலாற்றைக் கூறுவது பத்திரிகை. கடந்து போன சம்பவங்களை விட எமது நினைவு களில் நடமாடும் நிகழ்வுகளை விட இன்றைய வரலாறே நமக்கு முக்கியம்.

B.ஹோர்ன்

வலம்புரி பத்திரிகைக்கு ஏழு வயது பூர்த்தியாகிவிட்டது. யாழ்ப்பாணத்தை நவீன மயப் படுத்து வதற்கு இன்னொரு சாதனம் உறுதியாக அமைந்துவிட்டது என்று குதூகலம் அடையலாம்.

கடந்த ஏழு வருடங்கள் வலம்புரி சந்தித்த சவால்கள் அனேகம். ஆனால் எல்லா நெருக் கடிகளையும் சமாளித்து ஒரு தரமான பத்திரிகையாக கடந்த ஏழு வருடங்களாக வெளி வந்து கொண்டிருக்கிறது. வலம்புரியில் வரும் கட்டுரைகள் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்கின்றன.

பத்திரிகைகள் தான் சாதாரண மக்களின் பல்கலைக்கழகங்கள் . உலகில் பாதிப்பேர் தின சரிப் பத்திரிகைகளைவிட வேறு எதனையுமே வாசிப்பதில்லை என்றார் ஓர் அறிஞர். வலம்புரி என்ற பல்கலைக்கழகம் தொடர்ந்து நற்பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

**முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**

## இன்று ஒரு தகவல்

# அனைவரும் சமம்!

ஒரு சிகை அலங் காரக் கூடம். மிகவும் சுறுசுறுப்பாக எல்லோரும் வேலை செய்துகொண்டிருந்தார்கள். முடி வெடட வந்திருந்தவர்கள் நிறையப்பேர். எல்லோரும் வரிசை யாக உட்கார்ந்திருந்தார்கள்.

அந்தச் சமயத்திலே திடீரென்று கதவைத் திறந்து கொண்டு ஒருவா உள்ளே வந்தார். அவர் ஒரு பெரிய மனிதர். அவரும் முடிவெட்டிக் கொள்வதற்காகத் தான் உள்ளே வந்தார்.

அவரைப் பார்த்தவுடனே அங்கே வரிசையிலே உட்கார்ந திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"எப்படி இருக்கிறீர்கள்:...நல்லா இருக்கிறீர்களா" என விசாரித்தார்கள். எல்லாம் முடிந்ததும் வந்தவர் கேட்டார் "வரிசையிலே கடைசியாக இருக்கிறவர் யார்?" ஏன் என்று கேட்டாார்கள்."நான் அவருக்கு அடுத்த படியாக உட்கார வேண்டும். அதற்காகத்தான் கேட்டேன்" என்றார். உடனே அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள். "நீங்கள் வரிசை யிலே காத்திருக்கக் கூடாது...நீங்கள் அரசாங்கத்தின் தலைவர்... உங்களுக்கு நேரம் முக்கியம்.. அதனால் நீங்கள் முன்னால் போங்கள்..." என்றார்கள்.

ஆனால் அவர் அதற்கு உடன்படவில்லை. "தோழர் களே! உங்கள் கருத்துக்கு ரொம்ப நன்றி... எல்லோரும் வரிசையாகத் தான் வரவேண்டும்.... அதுதான்முறை. வரிசையிலே வரவேண்டும் என்னும் நடைமுறையை நானும் பின்பற்ற விரும்புகிறேன். நாங்கள் எல்லோரும் சமமானவர்கள்" என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு வரிசையிலே கடைசியாக இருந்த ஒரு நாற்காலியிலே போய் உட்கார்ந்தார். தன் சட்டைப் பையிலிருந்த ஒரு செய்தித்தாளை எடுத்தார். படிக்க ஆரம்பித்தார்.

ஆனால் அங்கே இருந்தவர்களாலேயே இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியவில்லை.., ஒருவா எழுந்து வந்தார்.

"ஐயா! இப்பொழுது என்னுடைய முறை வந்திருக் கிறது. உங்களை இங்கே காத்திருக்க வைப்பதை விட ஐந்து ஆண்டுகளுக்குக் கூட முடிவெட்டிக் கொள்ளாமலே என்னால இருக்கமுடியும்..." என்றார்.

இவா நிமிர்ந்து பார்த்தார். அவர் மறுபடியும் சொன்னார். "ஐயா, நீங்கள் வரிசை முறையைத் தாண்டிப் போக விரும்பவில்லை...சரி. ஆனால் என்னுடைய முறையை மாற்றிக் கொடுக்க எனக்கு முழு உரிமையும் இருக் கிறது. இதற்குப் பதிலாக உங்களுடைய கடைசி இடத்தை நான் எடுத்துக் கொள்ளுகிறேன்... இதை நீங்கள மறுக்க முடியாது" என்றார். அங்கேயிருந்த மற்றவர் களும் இதை ஒரு மனதாக வற் புறுத்த ஆரம்பித்துவிட் டார்கள்.அந்தப் பெரிய மனிதர் பார்த்தார்... கடைசியாக சரி என்று ஒப்புக்கொண்டார். அவர் யார் தெரியுமா? அவர் தான் மாவீரர் லெனின்.

ரஷ்யாவிலே கிரெம்ளின் சிகை அலங்காரக் கூடத் திலே தான் இது நடந்தது. எல்லோரும் இந் நாட்டு மன்னர்கள் என்று வாயளவிலே பேசுவதில் என்ன பிரயோசனம்?

நாம் எல்லோரும் சமம் என்பதை நடைமுறையிலே கடைப்பிடித்துக் காட்டியவர்கள் கொஞ்சப் பேர்தான்!.

அவர்களிலே ஒருத்தர்தான் தோழர் லெனின். வரிசை யிலே நின்று வருவதென்பது ஒரு சிறந்த தமிழ் பண்பு; உயர்ந்த பண்பாடு! இன்று பல இடங்களிலே அது நமக்குத் தேவைப்படுகிறது.

ஒரு ரேஷன் கடைவாசல். கடை திறப்பதற்கு முன்னாலே எல்லோரும் வந்து வரிசையிலே நின்றுவிட்டார்கள். கடைசியாக வந்த ஒருவர் கியூ வரிசையிலே முன்னால் போவதற்கு முயற்சி பண்ணினார்.

ஏற்கனவே வரிசையில் நின்று கொண்டிருந்தவர்கள் அவரை முனனாடி போவதற்கு விடவில்லை.வரிசையில் கடைசியாகப் போய் நில் ஏ்ன்று கத்தினார்கள்.அதை அவர் காதிலே வாங்கிக் கொள்ளவில்லை. முண்டியடித்துக் கொண்டு முன்னாலே போக முயற்சி பண்ணினார். எல்லோரும் சேர்ந்து அவரை வலுக்கட்டாயமாக இழுத் துக் கொண்டு வந்து பின்னூல் நிறுத்திவிட்டார்கள்...

"இதோ பாரப்பா... நாங்கள் இருக்கிறவரை நீங்கள் முன்னாடி போய் எதையும் வாங்கமுடியாது...தெரிந்து கொள்" என்றார்கள்.

இப்பொழுது அந்த ஆள் சொன்னார்."நான் இங்கே பின்னாடி நிற்கிறவரை நீங்களும் எதுவும் வாங்க முடியாது..." ஏன்? என்று கேட்டார்கள்.

நான் தான் கடையைத் திறக்க வேண்டிய ஆள். நான் கடையைத திறந்து உள்ளே போனால் தான் உங்க ளுக்குச் சாமான்களைத் தரமுடியும்...என்றாரே பார்க் கலாம்!.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆபத்திலிருந்து பெண்கள் எளிதாக தப்பும் வழி

'எந்த வீட்டில் பெண் தனியாக இருக் கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டு சரியான நேரம் பார்த்து அந்த வீட்டிற் குள் புகுந்தது அவளைத் தாக்கி நிலை குலைய வைத்து கொள்ளையடிப் பது தான் திருடர்களின் திட்டமாக இருக்கிறது. தனியாக இருக்கும் பெண்கள் தாக்கப் படுவதும் வீடுகள் கொள்ளையடிக்கப்படுவதும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டுதான் இருக் கிறது.

ஒரு கொள்ளை நடந்து முடிந்த பின்பு அந்த பாதுகாப்பு குறைபாட் டிற்கு யார் காரணம் என்று குறை சொல்லிக்கொண்டிருப்பதைவிட முத லிலே ஒவ்வொரு பெண்ணும் வீட்டில் பாதுகாப்பாக இருந்து தன்னையும் தன் உடமையையும் பாதுகாப்பதே சிறந்தது' என்கிறார் கராத்தே வீராங் கனை மஞ்சுளா சுரேஷ்.

இவர் கல்லூரி மாணவிகளுக்கும் குடும்பத் தலைவிகளுக்கும் வீடுகளில் தனிமையில் இருக்கும் போது பாது காப்பாக இருப்பது பற்றியும் திருடன் உள்ளே வந்துவிட்டால் வீட்டில் இருக் கும் பொருட்களை வைத்து எந்த இடத் தில் எப்படி தாக்குவது என்பது பற்றி யும் குறுகிய கால எளிய பயிற்சி முறை களை வடிவமைத்து கற்றுக்கொடுக் கிறார். எல்லோருக்கும் பயனுள்ள அந்த தாக்குதல் ஆலோசனைகளை இங்கே தருகிறார்.

பெண்கள் தனியாக இருக்கும் போது எந்த நேரத்தில் எதுவும் நடக்க லாம் என்ற எண்ணத்தில் ஊஷாரகவே இருக்க வேண்டும் திருடும் எண்ணத் தில் வருகிற ஒருவன் முதலில் காலிங் பெல்லை அடிக்கலாம். காலிங் பெல் சத்தம் என்பது முன்பின் யோசிக்கா மல் ஓடிப்போய் வீட்டைத் திறக்க வேண்டிய அவசர அழைப்பு அல்ல. அது உங்களை உஷார் படுத்தும் எச் சரிக்கை ஒலி. வெளியே நிற்பது யார் என்பதை ஜன்னலைத் திறந்து பார்த்து விட்டு உறவினர்கள் என்றால் கத வைத் திறவுங்கள் அறிமுகமில்லாத நபர் என்றால் கதவைத் திறக்காமலே அவர் யார் என்று கேளுங்கள். அவர் வந்த நோக்கம் என்ன என்று உண ருங்கள் தண்ணீர் கேட்கிறார் என்றால் கதவைத் திறக்காமலே தண்ணீர் கொடுங்கள். எந்தக் காரணத்தாலும் அறிமுகம் இல்லாதவர்களை வீட்டிற் குள் விட்டுவிடக்கூடாது.

உங்கள் கட்டுப்பாட்டை மீறி அந்த நபர் சாதுர்யமாக உள்ளே வந்துவிட் டால் முதலில் நீங்கள் தன்னம்பிக் கையை வரவழைத்துக் கொள்ளவேண் டும். பதட்டப்பட்டு விடக்கூடாது வீட்டின் முன்பகுதி கதவினையும் பின்பகுதி கதவினையும் திறந்து விடவேண்டும் அந்த திருடனிடம் இருந்து தப்பி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டால் கதவின் வழியாக வெளியே ஓடிவிடலாம்.

பெண்ணிடம் இருக்கும் தற்காப்பு ஆயுதங்களில் மிகச் சிறந்தது பலமாக எழுப்பும் கூச்சல்தான். பலத்த கூச் சலோடு எதிரியை பலமாக தாக்க வேண்டும் தாக்கும் இடமும் மிக முக் கியமானது. பெண் கத்துகிற கத்தலில் பலமான எதிரிகூட நிலை குலைந்து விடுவான். அந்தச் சத்தம் அக்கம் பக் கத்து வீட்டினரையும் உஷார் படுத்தி உங்கள் உதவிக்கு வரவைத்து விடும்.



நீங்கள் தண்ணீர் எடுக்க வீட் டின் உள்பகு திக்கு செல் லும் போது அவன் பின் தொடர்ந்து வந்து பின் புறமாக பிடித் தால் முதலில் அவன்கையை பலமாக கடிக்க வேண்டும். அவன் வலி யில் கத்தும் போது பலமாக அவனை அமுக்கி பலம் கொண்டு தள்ளிவிட்டு வெளியே ஓடிவர முயற்சிக்க வேண்டும்.

ஆண்களின் உடலில் எந்தெந்தப் பகுதியில் பெண்கள் எப்படி தாக்க வேண்டும் தெரியுமா?

*கண்:–* உடல் உறுப்பில் ரொம்ப பலகீனமான பகுதி இது. பெண் விர லால் ஆணின் கண்ணைக் குத்த வேண் டும் கண்ணில் அடிபடும்போது அவ னுக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியாது. அவன் நிலைகுலைந்து போவான். அப்போது அவனுக்கு நிதா னிக்க நேரம் கொடுக்காமல் அடுத் தடுத்து தாக்குதலை தொடரவேண்டும்.

*தொண்டை:–* தொண்டையின் இரு பகுதியிலும் விரலால் அழுத்த வேண்டும் அப்படி செய்தால் எதிரி யின் குரல்வளையே உடைந்து விடும். பெரிய விலங்குகளைக்கூட சிங்கம் புலி போன்றவை எளிதாக கொல்லும் ரகசியம் இதுதான்.

அவை மின்னல் வேகத்தில் வந்து பெரிய மிருகங்களின் பின்புற தலைப் பகுதியில் இருந்து கொண்டு குரல் வளையைத்தான் கவ்வி இழுக்கும் பெண், ஆணின் குரல் வளையை அழுத் திப்பிடித்தால் அவனால் எதுவும் செய்ய முடியாது.

*பின் தலைப்பகுதி–* இதில் லேசாக தாக்கினால் கூட எதிரிக்கு தலை சுற் றல் வந்துவிடும் பலமாக இந்த பகுதி யில் அடித்து விட்டால் எதிரிக்கு உயிரி ழப்புகூட ஏற்பட்டுவிடும்.

*மூக்கு:–* மூக்கின் அடிபகுதியும் மீசைப்பகுதியும் இணையும் இடத்தில் தாக்கவேண்டும்.

*அடிவயிறு:–* ஆண்களை உடனடி யாக நிலைகுலைய வைக்க பெண் கள் எளிதாக தாக்கும் பகுதியாக இருப் பது ஆண்களின் அடிவயிறு. அடிவயிற் றில் பிறப்பு உறுப்போடு சேர்த்து காலால் பலம் கொண்டு தாக்கலாம் தாக்கிவிட் டால் அவ்வளவுதான் அவன் வலியு டன் கிடந்து துடித்துக்கொண்டிருக் கும் போது அடுத்து மூக்கில் குத்தி னால் போதுமானது.

*மேற்கண்ட பகுதிகளைத் தவிர கண்களின் ஓரம், நெஞ்சின் இருபகுதி, இதயப்பகுதி, கழுத்தின் ஓரப்பகுதி, மூட்டுப் பகுதிகள், கால் தசைப்பகுதி, கால் எலும்பு பகுதி, முதுகெலும்பு பகுதி போன்றவைகளில் பெண்கள் பலமாக தாக்கினால் திருடர்கள் நிலை குலைந்து போவார்கள். உண்மையை உணராமல் ஆத்திரப்பட்டு அப்பாவி களை தாக்கி விடக்கூடாது.*

*ஒரு திருடனைத் தாக்கும் போது ஒரு வினாடிக்கு நாலைந்து அடியா வது மின்னல் வேகத்தில் விழ வேண் டும். ஒரு அடியோடு விட்டு விடக்கூடாது. நம் தாக்குதலால் திருடனுக்கு என்ன ஆகும்? என்ற கோணத்தில் எல்லாம் யோசிக்கக் கூடாது. நீங்கள் தாக்க யோசித்தால் அவன் உஷாராகி உங் களை கொலை செய்யும் அளவிற்கு கூட செல்லலாம். திருடன் உங்களை விட பலமானவன். உயரமானவன் என்றால் பெண்கள் தாக்குதல் நடத்த கைகளைவிட கால்களையே அதிகம் பயன்படுத்த வேண்டும்.*

*பெண்கள் ஓய்வு நேரங்களில் வீட்டில் இருக்கும் அரிசி மூட்டைகளில் கையால் குத்திக் குத்தி கைக்கு பலம் சேர்த்துக்கொண்டிருக்கவேண்டும். அப்படி பயிற்சி செய்திருந்தால் திருட னுக்கு நீங்கள் கொடுக்கும் குத்து மிகப்பலமாக இருக்கும். திடீரென்று வந்து நிற்கும் திருடனை நீங்கள் தாக்குவதற்கு பொருத்தமான ஆயுதம் எது என்ற கோணத்தில் சிந்தித்து நேரத்தை செலவிடக்கூடாது.*

*சாப்பிடும் தட்டு, கரண்டிகள், கப்பு கள், தயிர் கடையும் மத்து, அகப்பை போன் றவைகளையும் மிளகாய் தூள், மிளகுத் தூள் போன்றவைகளையும் நல்ல ஆயுதங்களாக பயன்படுத்த லாம். பெண்கள் தனியாக இருக்கும் போது நைட்டியோ புடவையோ கட்டி யிருக்க கூடாது. சுடிதார், சல்வார் கமீஸ் போன்றவைகளை உடுத்தி இருந்தால் தப்பி ஓடவும், தாக்குதல் நடத்தவும் வசதியாக இருக்கும்.*

**நன்றி: இணையத்தளம்**

# குழந்தைகளின் வைட்டமின் 'ஏ' குறைபாட்டைப் போக்க வருகிறது தங்க அரிசி

உலகில் வருடந்தோறும் 100 மில் லியன் குழந்தைகள் வைட்ட மின் 'ஏ' குறைபாட்டால் பார்வைத் தறனை இழக்கின்றனர். அதே சமயம் வைட்ட மின் 'ஏ' சத்தின் பற்றாக்குறையால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து. வரு டந் தோறும் மூன்று இலட்சம் குழந் தைகள் நிமோனியா, தடடம்மை, டயாயா போன்ற வியாதிகளால் அவஸ தைப்படுகின்றனர் என்கிறது உலக சுகாதார அமைப்பு.

இதை நிவர்த்தி செய்ய ஆசியா வல் அதிக மக்கள் உண் ணும் அரிசி உணவில்வைட்டமின 'ஏ' இருககும்படி செய்தால், குழந்தைகளை பார்வை திறன் பாதிப்பிலிருந்து காப்பாற்றலாம் என முடிவு செய்தனர் சுவிட்சர்லாந்து நாடடிலுள்ள சுவிஸ் பெடரல் இன்ஸ் டியூட் ஆப் டெக்னோலஜியில் பணியாற் றிய பயிர்கள் மரபணு ஆராய்ச்சி விஞ் ஞானிடாக்டர் இஸ்கோ பாட்ரேக்கஸ மற்றும் பெரிபெர்க் பல்கலைக்கழக தாவரவியல் விஞ்ஞானி பீட்டர் பேயர்.

இவர்கள் இருவரும் இணைந்து 1999 இல் உருவாக்கியது தான் மர பணு மாற்றப்பட்ட தங்க அரிசி. பொது வாக அரிசியை தீட்டும்போது அதிலுள்ள 'பீட்டா -கேரட்டீன்' எனும சத்து போய் விடுகிறது. இதுதான் வைட்டமின 'ஏ'யை உருவாக்கும் மூலப் பொருள்.

பாட்ரோக்கஸ் மற்றும் பேயர் இணைந்து உருவாக்கிய மரபணு மாற்றப்பட்ட அரிசியில் வைட்ட மின் 'ஏ'யை உருவாக்கும்பீட்டா-கேரடடீன சத்தும் இருக்கும்படி அமைத்தனர். மற்ற அரிசி வெள்ளை நிறத்தில் இருக் கும். இந்த அரிசி மரபணு மாற்றம் செய்யப்பட்டதால், தங்கநிற மஞ் சள் நறத்தில் இருந்தது. அதனால் இதற்கு 'தங்க அரிசி' எனறு பெயரிட்டனர். தங்க அரிசியை வெற்றிகரமாகக் கொண்டுவர அமெரிக்காவிலுள்ள ராக் பெல்லா பவுண் டேஷன் பாட் ரோக கஸ் மற்றும் பேயருக்கு ஆராய்ச்சிக காக நிதி வழங்கியது. மூன்று வருட கடின உழைப் பிற்கும், பலவித ஆரம்ப கட்ட தோல்விகளுக்கும் பின்னர் தங்க அரிசியை உருவாக்கினர்.

தங்க அரிசியின் மாதிரி வடிவம் கிடைத்ததும் அதை தன் சொந தப் பண்ணையில் பயிரிட்டு, அதன் வளர்ச்சி மற்றும் அதனால ஏதேனும் குறைபாடுகள் வருகிறதா என ஆய்வு செய்தார் பாட்ரோக்கஸ். அதில் வெற்ற கிடைத்தவுடன், உலகிற்கு தெரியப் படுத்த விரும்பினார். தங்க அரிசி அறி முகமான2000ஆம் ஆண்டிலேயே அந்த மரபணு தொழில்நுட்பத்தை சுவிஸ் நாட்டு ஏஜென்சியிடம் பெற்றது இந் தியா. அதன் இந்திய வகை அரிசி ரகங்களில் புகுத்தி , மரபணு மாற்றப் பட்ட தங்க அரிசியை உருவாக்க ஆராய்ச்சிகளில் இறங்கியது தமிழ் நாடு வேளாண்மை பலகலைக்கழகமும், டில்லி பல்கலைக் கழகத்தின் 'பிளான்ட மாலிகுலர் பயாலஜி' துறையும்,

மரபணு மாற்றப்பட்ட தங்க அரி சியை இந்தியரக அரிசியில் கொண்டு வந்து, அதன் வளர்ச்சி ,அதன் பயன ளிப்பு மற்றும் அதனால் ஏதேனும் அலர்ஜி போன்ற கோளாறுகள் ஏற் படுகின்றனவா என்பதை அறிந்த பின னரே விவசாயிகளுக்கு வர்த்தக ரீதி யாக வழங்கமுடியும். அதற்கு நான்கு ஆண்டுகள் தேவை என்றது புதுடில் லியிலுள்ள இந்திய வேளான் அராய்ச்சி பயிலகம்.

தங்க அரிசி வயிற்றமின் ஏ பற் றாககுறையை நிவர்த்தி செய்யும் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு இதனால் குழந தைகள் மற்றும் கர்ப்பிணிகளின் ஆரோக கியம் மேம்படும். ஆனால் அதை பாது காப்புச் சோதனைகள் நடத்தப்பட்ட பின்னரே வர்த்தக ரீதியில் வழங்க வேணடும்என்றார்புகழ்பெற்ற வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமி நாதன்.

பிறர் மனம் வருந்த செயல் புரியாதீர்கள்; உங்கள்உரிமையை விட்டுவிடாதீர்கள்; பிறர் உரிமையில் தலையிடாதீர்கள்.

–சுவாமி இராமதாசர்

வலம்புரி

# ஏழு ஆண்டு நிறைவில்...

வலம்புரி நாளிதழ் முகிழ்ப்படைந்து இன்று ஏழு வருடங்கள் நிறைவடைந்து விட்டன. எட்டாவது ஆண்டில் காலடி வைக்கும் வலம்புரிக்கு வழமைபோல் உங்கள் ஆசியும் ஆதரவும் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஒரு நாளிதழின் வரவு என்பதும் அதன் வாழ்நாள் நீட்சி என்பதும் வாசகர்களின் கைகளிலேயே இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

இங்கு வாசகர்களின் ஆதரவென்பது பத்திரிகையை விலை கொடுத்து வாங்கும் செயலை மட்டும் குறித்து நிற்காது. மாறாக இந்தப் பத்திரிகை எமது மண்ணுக்கும் மக்களுக்கும் தேவையென உள்ளார்ந்தமாக வாசகர்கள் எண்ணுகின்ற நினைப்பே நாளிதழின் வாழ்வுக்கு மூச்சுக் கொடுப்பதாகும்.

அந்த நினைப்பு வலம்புரிக்கு நிறையவே உண்டு. கடந்த ஏழு வருடங்களில் நாம் சந்தித்தவை ஏராளம். அவற்றை எல்லாம் எதிர்கொண்டு எட்டாவது ஆண்டில் காலடி வைக்கிறது எனில் அதற்கு இறைவனின் திவ்விய கருணையே காரணம் எனலாம்.

செய்திகளை எப்படியும் தரலாம் என்பதும் பேனாவை எடுத்து விட்டால் எதுவும் எப்படியும் எழுதலாம் என்ற அகந்தையும் மக்கள் மத்தியில் நின்று நிலைப்பதற்கான முறைமையன்று.

பத்திரிகைத் தர்மத்தினின்றும் வழுவாது நீதியை-உண்மையை எடுத்துக் கூறுவதே நாளிதழ்களின் பணியாகும். இதனை வலம்புரி தன்னால் முடிந்தவரை ஆற்றி வருகின்றது.

அதேநேரம் *20.12.1999* ஆண்டு வலம்புரி முகிழ்ப்படைந்த பின்னர் அது தான் வழங்கிய செய்திகளில் நடுநிலைத் தன்மையைப் பேணி வருவதோடு யாழ்ப்பாணத்தில் பத்திரிகை ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டது என்றால் அது மிகையன்று.

வலம்புரியின் வருகையால் பத்திரிகைத் தர்மம் யாழ்ப்பாணத்தில் நிலைபெற்றது எனலாம். அதேநேரம் யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறையில் நிலவிய ஏக போக உரிமையை உடைத்தெறிந்த வலம்புரி, ஊடகத்துறையில் ஆர்வம் உடையவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் இன்று இருக்கக் கூடிய அநேகமான பத்திரிகையாளர்கள் வலம்புரி பாசறையில் உருவானவர்கள் என்ற உண்மை மறைப்பதற்குரியதல்ல.

வலம்புரியில் பயின்று இன்று வேறு ஊடகங்களில் கடமையாற்றுபவர்கள் தம்மளவில் நன்றி மறந்தவர்களாகவிருப்பினும் அவர்களின் ஊடகப் பணிக்கான பாதையைத் திறந்து விட்டது வலம்புரியே என்ற உண்மையை அவர்கள் ஒருபோதும் மறந்து விட மாட்டார்கள்.

அதேநேரம் வலம்புரி தனது பாசறையில் வளர்ந்தவர்களுக்கு சொல்ல விளைவது, நேர்மையாக நடவுங்கள் அதுவே உங்கள் வாழ்க்கையின் வெற்றிப்படியாகவிருக்கும் என்பதாகும்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல வலம்புரி தன்னை நிந்திப்போரையும் தாங்கும் இயல்புடையது என்பதால் அது தனது நீண்ட பயணத்தில் எந்த சவால்களையும் எதிர் கொள்ளும்.

அதற்கு வாசகப் பெருமக்களாகிய உங்களின் ஒத்துழைப்பும் இறைவனின் அருளாசியும் என்றும் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு எட்டாவது ஆண்டில் கால் பதிக்கின்றது உங்கள் வலம்புரி.

# புலிகளை அரசு தடைசெய்திருந்தால் நாடு யுத்த களமாக மாறியிருக்கும்

## பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் 80 சதவீதமான மக்களின் அபிப்பிராயத்தையே இனப்பிரச்சினைத் தீர்வு யோசனையாக புத்திஜீவிகள் குழுவினர் சமர்ப்பித்துள்ளனர். இந்தயோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகின்றேன்.

தற்போதைய நிலைமையில் விடுதலைப்புலிகளை அரசாங்கம் தடை செய்திருந்தால் நாடு தீவிர யுத்த களமாக மாறியிருக்கும் என அரசியலமைப்பு விவகாரப் பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமயவும் இந்த யோசனையை எதிர்த்து சர்வ கட்சி ஆலோசனைக் குழுவிலிருந்து விலகியமை வேடிக்கையாகும். காரணம் இந்த யோசனையை அரசாங்கம் இன்னும் அங்கீகரிக்கவில்லை.

ஜே.வி.பிக்கு தேவையான யோசனையை முன்வைக்க வேண்டுமானால் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் புத்திஜீவிகள் குழுவை நியமித்திருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

நாட்டின் தற்போதையை அரசியல் சூழ்நிலைதொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக புத்திஜீவிகள் குழுவின் 11 உறுப்பினர்கள் முன்வைத்துள்ள யோசனையை தனிப்பட்ட ரீதியில் நான் ஏற்றுக் கொள்கின்றேன். இதில் சில முரண்பாடான விடயங்கள் காணப்பட்டாலும் இதில் அடங்கியுள்ள 90 சதவீதமான விடயங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகும்.

இதேவேளை புத்திஜீவிகள் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள தனிப்பட்ட ரீதியிலான யோசனைகளிலும் பத்து சதவீதம்ளவுக்கு நான் இணங்கும் விடயங்கள் உள்ளன.

நாம் இவை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். அதனைவிடுத்து யோசனை முன்வைக்கப்பட்டமையை எதிர்த்து சர்வ கட்சி ஆலோசனைக் குழுவிலிருந்து விலகுவது முறையற்ற விடயமாகும்.

இதேவேளை இந்த யோசனையைச் சமர்ப்பித்துள்ள புத்திஜீவிகள் குழுவினர் நியமிக்கப்பட்ட போது யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் தற்போது இவர்களின் யோசனையை எதிர்க்கின்றனர்.

புத்திஜீவிகள் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையின் வடிவம் சிறந்ததாகும். அந்தக் குழுவின் அபிப்பிராயத்தையே முழுநாட்டு மக்களில் 80 சதவீதமானவர்கள் கொண்டுள்ளனர்.

அதன் அடிப்படையிலான விடயத்தையே இனப்பிரச்சினைத் தீர்வு யோசனையாகப் புத்திஜீவிகள் சமர்ப்பித்துள்ளனர். தற்போதைய நிலைமையில் புலிகளை அரசாங்கம் தடை செய்திருந்தால் நாடு தீவிரமான யுத்த களமாக மாறியிருக்கும் என்றார். (ச-5)

# வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க 10 ஆண்டுத் திட்டம் ஒன்று அமுலாகும்

நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 10 ஆண்டுத் திட்டம் ஒன்றை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் கூடுதலான இளைஞர், யுவதிகளை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தவும் பாடசாலை கல்வியை அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய வகையில் தரம் உயர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வாழ்க்கை மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் செயலாளர் ரீ.எச்.ஜீ.பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. கடந்த வருடம் இலங்கையில் 22 சதவீதமானவர்கள் வேலையற்றிருந்ததாக ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டால் 2010 ஆம் ஆண்டளவில் இலங்கையில் வேலையற்றோர் வீதத்தை 9 ஆகக் குறைக்க முடியும்.

அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள 10 ஆண்டுத் திட்டத்திற்குத் தேவையான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும்.

இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை ஒரே வலைப்பின்னலில் நடைமுறைப்படுத்தி அதனை ஒரு தேசிய திட்டமாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து 2 லட்சம் மக்கள் இடம்பெயர்வு

## பிரித்தானிய அமைப்புக் கவலை

(கொழும்பு)

கடந்த ஏழு மாத காலத்தில் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். ஆழிப் பேரலை பேரழிவினால் தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறிய மக்கள் தொகையில் பாதி இது என முன்னணி பிரித்தானிய துயர் துடைப்பு அமைப்பொன்று கவலை தெரிவித்துள்ளது.

போரின் பயங்கரமான பாதிப்பும் நாட்டின் சில பகுதிகளில் போக்குவரத்துச் சேவை கட்டுப்படுத்தப்பட்டிருப்பதும் ஆழிப் பேரலை நிவாரணப் பணிகளை முடக்கி உள்ளன.

அத்துடன் மனிதாபிமான உதவிகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. உதவி நிறுவனங்களுக்கான கட்டுப்பாடு கட்டுமானங்களை உருவாக்குவதில் பாரிய தாமதத்தைஏற்படுத்தியுள்ளது.

மேலும் பணியாளர்களினால் சில பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் உள்ளது. ஆழிப் பேரலை மறு நிர்மாணப் பணிகளில் அளவிலும் பணிகள் தொடர்வதிலும் நாட்டின் வடக்கிற்கும் தெற்கிற்கும் பாரிய வேறுபாடு உள்ளது.

ஏறக்குறைய அரை மில்லியன் மக்கள் யாழ்.குடாநாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற ஆழிப் பேரலைத் தாக்குதலினால் பெரும் பாதிப்புக்குளான மக்கள் அண்மைய தாக்குதல்களால் 2 ஆம் முறையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கெயர் அனைத்துலகத் திட்டத்தின் கீழ் வடக்கில் ஆழிப் பேரலைக்குப் பிந்திய வீட்டுக் கட்டுமானப் பணிகள் 10 வீதம் நடைபெற்றன. அண்மைக் காலத்தில் இடம்பெயர்ந்துள்ள 2லட்சத்து 10 ஆயிரம் பேரில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அளவுக்கு அதிகமாக அதிகரித்துள்ளன. அரிசி, சீனி, மாப் போன்ற பொருள்களின் விலைகள் மூன்று மாதம் இருந்த விலைகளை விட மூன்று நான்கு மடங்காக அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

முதலாம் வருட தேசியக் கல்வி நிறுவக கல்வி டிப்ளோமாப் பரீட்சைக்குத் தேற்றவுள்ள சகல ஆசிரியர், மாணவர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி த.வில்வநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

# மருந்துகள் இல்லை நோயாளிகள் அவதி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் தற்போது பரவிவரும் சிக்கின்குனியா காய்ச்சலால் தீவகத்திலுள்ளவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இந்தக் காய்ச்சலுக்கு பாவிக்கப்படும் புறூபன், பனடோல் மாத்திரைகள் இல்லையெனக் கூறப்படுகின்றது. இந்த மாத்திரைகள் ஒன்று தனியார் கடைகளில் 25 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் தெரியவருகின்றது. (எ-72)

# சென்னைக்குச் சென்ற இலங்கைக் கடற்படையினர்

(சென்னை)

இலங்கைக் கடற்படை வீரர்கள் 12 பேர் சென்னை விமான நிலையத்தை நேற்றுச் சென்றடைந்துள்ளனர். மகாராஷ்டிர மாநில புனேயில் பயிற்சி மேற்கொள்வதற்காக ஜெட் ஏர்வேஸ் விமானம் மூலம் மும்பைக்குச் செல்லும் வழியில் இவர்கள் சென்னைக்கு சென்றதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

இவர்கள் அனைவரும் இலங்கைக் கடற்படையின் விளையாட்டு அணியைச் சேர்ந்தவர்கள் என்றும் விளையாட்டு தொடர்பான பயிற்சிக்காகவே இந்தியா வந்துள்ளதாகவும் இந்தியத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே பயிற்சிக்காக கோவை வந்திருந்த இலங்கை விமானப் படையினர் அண்மையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பட்ட நிலையில் தற்போது கடற்படை வீரர்கள் இந்தியா வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# ஒரு தேசத்தின் தூதுவருக்கு இணையானவர் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

## லண்டன் நாளேட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)

லண்டனிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில நாளேடான த இன்டிபென்டன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தொடர்பான ஆய்வு ஒன்றை தனது நாளேட்டில் வெளியிட்டுள்ளது.

ஜஸ்ரின் கூக்லர் என்பவர் எழுதிய அந்த ஆய்வில் போராளிக்குழுவின். சர்வதேச தொடர்பாடலுக்கு உரியவராக செயற்பட்ட அன்ரன் பாலசிங்கம் ஐரோப்பிய நாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.


அத்துடன் அன்ரன் பாலசிங்கத்துக்கு நோர்வே நாட்டுப் பிரதமர் அனைத்துலக நாடொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேசத்தின் தூதுவருக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை கொடுத்ததாகவும் எழுதியிருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இணையாக குரல் தரவோ முடிவுகள் எடுக்கக்கூடிய தகைமை உள்ளவர் அன்ரன் பாலசிங்கம். மாவோ மற்றும் செகுவேரா போன்றோரின் கொள்கைகளில் கைதேர்ந்தவர் அன்ரன் பாலசிங்கம்.

பல ஆய்வாளர்கள் பிரபாகரனுக்கும் பாலசிங்கத்துக்கும் இடையே இருந்த பொருத்தம், போராட்டத்தையும் விடுதலைப்புலிகள் அமைப்பையும் மிகவும் சக்திவாய்ந்ததாக வடிவமைத்திருந்தனர்.

அன்ரன் பாலசிங்கத்தின் அணுகுமுறை 1985 இல்இருந்து மிகவும் வெற்றிகரமான பேச்சுக்களை விடுதலைப்புலிகள் நடத்துவதற்கு உதவியிருந்ததுடன் இறுதியாக தோல்வியில் முடிந்த பேச்சின்போது அவர் வெளியேறியிருந்தாகவும் ஜெஸ்ரின் கூக்லர் குறிப்பிட்டுள்ளார்.

நோயின் பிடியில் துன்பப்பட்ட வேளையிலும் கடந்த மாதம் அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், தேசத்தில் எமது மக்கள் படும் துயரத்துடன் ஒப்பிடும் போது



தனது நோய் ஒரு பொருட்டல்ல என தெரிவித்ததாகவும் ஜஸ்ரின் கூக்லர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-1)

## சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிடம் பிரேரணை எதுவும் முன்வைக்க வில்லை

### அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிடம் அரசாங்கம் எந்தவொரு பிரேரணைகளையும் முன்வைக்க வில்லை என்று அரசாங்க ஊடகப் பேச்சாளர் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தற்போது ஒவ்வொரு கட்சிகளும் தத்தமது ஆலோசனைகளை முன்வைக்கின்றன. இதனை அரசாங்கத்தின் கருத்தாக கருத முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் ஆலோசனைகள் எதுவும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்படவில்லை.

சகல கட்சிகளின் ஆலோசனைகளும் பெறப்பட்டு அவற்றை மதிப்பிட்டு செய்த பின்னரே அரசாங்கம் தமது தீர்மானத்தை வெளியிடும் என்று நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் யாப்பா தெரிவித்தார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் இறுதித்தீர்மானம் விரைவில் பெற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் யாப்பா குறிப்பிட்டார்.

(ச-133)

## "தேசத்தின் குரல்" பாலசிங்கத்தின்...

சுகவீனம் காரணமாக கடந்த 14 ஆம் திகதி காலமான விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இறுதி நிகழ்வுகள் இன்று லண்டனில் நடைபெறவுள்ளது.

பிரித்தானிய நேரப்படி இன்று காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரையும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் பூதவுடல் அலக்சாண்டரா மாளிகையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அவரது இறுதி நிகழ்வையொட்டி தமிழர் தாயகப்பகுதி எங்கும் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் துக்க தின நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ் அஞ்சலிநிகழ்வுகளில் கனடா,பிரான்ஸ் நோர்வே ,டென்மார்க் ,பின்லாந்து,அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் அரசியல் தலைவர்களும் இராஜதந்திரிகளும் கலந்து தமது அஞ்சலியை செலுத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் எரிக்சொல் ஹெய்மும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கத்தின் இறுதி வணக்க நிகழ்வு இன்று தமிழீழ தாயகம் உட்பட ஆசியப்பிராந்தியத்திற்கு நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

செய்கோள் கே.யூ.அலைவரிசையில் தற்போதுள்ள தமிழீழ தேசியத் தொலைக் காட்சிக்கான நிலையில் புதிய அலை அதிர்வெண்ணில் இன்று நேரடி ஒளிபரப்பு இடம் பெறவுள்ளது.

செய்மதி ஒளிபரப்பு அலைவரிசை மூலம் இன்று பிற்பகல் 2 மணிமுதல் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் இறுதி வணக்க நிகழ்வு ஆசியப்பிராந்தியத்தில் நேரடியாக ஒளிபரப்பாகவுள்ளது. (எ-1)

## உச்சவிலையில் விற்கப்பட்ட பொருட்கள் இராணுவத்தினரால் பறிக்கப்பட்டது

### திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் வைத்து அதிகூடிய விலையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு வீதியில் வீசப்பட்டன.இதன்போது அப் பகுதியில் சென்ற மக்கள் அப் பொருட்களை எடுத்துச்சென்றனர்.

சவர்க்கார வகைகள் உட்பட்ட பொருட்கள் திருநெல்வேலியில் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. இது குறித்து வயோதிபர் ஒருவர் இராணுவத்திடம் செய்த முறைப்பாட்டையடுத்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இப் பொருட்கள் யாவும் கடந்த காலங்களில் தம்மால் ஏடுத்துவரப்பட்டவை என்றும் இவற்றை கட்டுப்பாட்டு விலைகளில் கொள்வனவு செய்து அதியுயர் விலையில் மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு இராணுவத்தினரால் எச்சரிக்கை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-133)

## 21 மாணவர்களையும்...

மாணவர்களையும் அவர்களது ஆசிரியர் மற்றும் தனியார் துணைப்பாட வகுப்பு நிறுவனம் ஒன்றின் உரிமையாள ரையும் பிடித்துச் சென்றனர்.

க.பொ.த.சாதாரண தரம் பயிலும் இந்த மாணவர்கள் துணைப் பாட வகுப்புக்குச் சென்ற இடத்தில் பிடித்துச் செல்லப்பட்டனர். மாணவர்களை விடுதலைப்புலிகள் பிடித்துச் சென்றதாக இராணுவத் தரப்பினர் நேற்று காலை குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-5)


## மரண அறிவித்தல்

### செல்லையா வீரசிங்கம்

**(முன்னாள் முகாமையாளர்,ப.நோ.கூ.சங்கம், திருநெல்வேலி)**

*யாழ்ப்பாணம் நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் , வதிவிடமாகவும் கொண்ட செல்லையா வீரசிங்கம் 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ் சென்ற செல்லையா-சௌந்திரம் தம்பதியரின் அன்பு மகனும் இராசமணியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி),விமலரதி, நித்தியகலா,ஸ்ரீதரன் (ஸ்ரீடியிற்றல் கலர்லாப்,ஸ்ரீ அமலா நகைமாடம் யாழ்ப்பாணம்), விஜயகுமாரி, ரவீந்திரகுமார் (சுப்பஸோ டியிற்றல் கலர்லாப் கொழும்பு, யாழ்ப்பாணம்) ஜெயசீலன் (சானுகா நகைமாடம் யாழ்ப்பாணம்), ஸ்ரீசக்திவேல் (ஸ்ரீமீனாட்சி தங்கமாளிகை) நிகிலா, உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,*

*கலா (ஜேர்மனி), சண்முகலிங்கம் (பூரணி நகைமாடம் யாழ்ப்பாணம்), சுரேந்திரன் (டுபாய்) , மைதிலி, (கொழும்பு), சத்தியரூபன் (ஸ்ரீ நதியா நகைமாடம் யாழ்ப்பாணம்) அனுஷியா (கொழும்பு) சத்தியப் பிரியா (பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப் பாணம்), கிருஸ்ணமோகன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாச மிகு மாமனும்,*

*திருசாந்தன், நிரோசன் ,ஸ்ரீநதியா, சானுகா, கஜலக்ஷன், கஜகனிஷன், மீனுஷா , மீனலக்ஷன், ஸ்ரீராம், கரிணி, சுபசிரவீன், திருஷாயினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.12.2006) இன்று புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

தகவல்,
**வீ.ஜெயசீலன்** (மகன்)
198/5 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-அ-609)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனங்களின் உரிமையாளரான
வீ.ரவீந்திரகுமாரின் அன்புத் தந்தையார்



### செல்லையா வீரசிங்கம்

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த கவலையடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஊழியர்கள்:
சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர்.
ரவி டிஜிற்றல் கலர்லாப்.
சுப்பஸோ ஸ்ருடியோ.
சுப்பஸோ கலர்லாப் (கொழும்பு).

(C-566)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.